ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 24.02.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு – 2015 பெப்புருவரி

2015 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2014 திசெம்பர் இறுதியின் 2.1 சதவீதத்திலிருந்து 3.2 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் ஆண்டுச் சராசரி பணவீக்கம் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 3.3 சதவீதத்திலிருந்து 3.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. சனவரியில் பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயர்ந்த உணவு விலைகளே காரணமாகும். இவை, தற்பொழுது பெருமளவிற்கு சமநிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. உள்நாட்டு பெற்றோலிய விலைகளிலும் அதேபோன்று அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களின் விலைகளிலும் செய்யப்பட்ட அண்மைய கீழ் நோக்கிய திருத்தங்களின் தாக்கம் பெப்புருவரியிலிருந்தான அலுவல்சார் விலைச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்படக்கூடும். இது எதிர்காலத்தில் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவு கீழ் நோக்கிய பெயர்வினை ஏற்படுத்தும். இதன்படி மோதலுக்குப் பின்னான காலத்தில் ஒற்றை இலக்க வீதத்தினைப் பதிவு செய்த பணவீக்கம் 2015இலும் வசதியானதொரு அளவில் நிலைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2014 திசெம்பரில் வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2014 ஓகத்திலிருந்து காணப்பட்ட அதன் உயர்வடைந்த போக்கினைத் தொடர்ந்தது. உண்மையான நியதிகளில், தனியார் துறையினால் பெறப்பட்ட கொடுகடன் திசெம்பர் மாத காலப்பகுதியில் வரலாற்றிலேயே உயர்ந்த மட்டமான ரூ.76.5 பில்லியனைப் பதிவு செய்தமையின் விளைவாக தனியார் துறையின் மொத்த அதிகரிப்பு 2014இல் ரூ.223.9 பில்லியனாகக் காணப்பட்டது. கொடுகடன் வளர்ச்சியின் துறைவாரியான பகுப்பாய்வு 2014இன் பின்னரைப் பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைக்கான கொடுகடன் பகிர்ந்தளிப்பு அதிகரித்துள்ளமையினை எடுத்துக்காட்டியது. இது பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை நன்கு விளக்குவதாக இருந்தது. தாழ்ந்த பெயரளவு வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்டுவரும் வியாபார நம்பிக்கை என்பனவற்றின் காரணமாக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2015இல் ஆரோக்கியமானதொரு வேகத்தில் வளர்ச்சியடையும் என்பதனை

எதிர்பார்க்கச் செய்கிறது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கித்தொழில் துறையிலிருந்து அரசிற்குக் கிடைத்த தேறிய கொடுகடன் ரூ.134.6 பில்லியனால் அதிகரித்த வேளையில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் ரூ.80.9 பில்லியனால் அதிகரித்தது. 2014 திசெம்பரில் விரிந்த பணம் ($M_{2b}$), ஆண்டிற்காக எறிவு செய்யப்பட்ட 13.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் விரிந்த பணத்தின் வளர்ச்சி 13.3 சதவீதமாகக் காணப்பட்டது.

வெளிநாட்டுப் பக்கத்தில், இலங்கை ரூபா 2015 பெப்புருவரி 20 இலிருந்து இன்றுவரை ஐ.அ.டொலருக்கெதிராக 1.4 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு உயர்ந்த இறக்குமதிக் கேள்வியே காரணமாகும். இப்பருவகாலக் கேள்வி படிப்படியாகக் குறைவடைவது மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சல் கிடைக்கப்பெற்று வருவது என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் துறை ஆண்டின் எஞ்சிய பகுதியில் மீளெழுச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2015 பெப்புருவரி 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மேற்குறிப்பிட்ட காரணிகளைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் மாற்றம் செய்யாது அப்படியே பேணுவதெனத் தீர்மானித்துள்ளது. இதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் முறையே 6.50 சதவீதத்திலும் 8.00 சதவீதத்திலும் காணப்படும். துணைநில் வைப்பு வசதியைப் பெறுவது ஒழுங்குமுறைப்படுத்தப்படும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை வெளியிடப்படும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை. துணைநில் வைப்பு வசதியைப் பெறுவது ஒழுங்குமுறைப்படுத்தப்படும்** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.50% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |